14.03.2024

O.S.No.299/2014

வா.சா.1 .திரு.சுந்தர் த.பெ.ராஜகோபால்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1. தாவா சொத்து இ.மலம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ளது. தாவாசொத்தின் சர்வே எண்கள் 63/2, 67/6 மற்றும் 65 ஆகும். தாவாசொத்தின் மொத்த விஸ்தீரணம் 24.5 ஏக்கர் ஆகும். தாவா சொத்து ஆதியில் மருதப்பன் என்பவருக்கு பாத்தியப்பட்டு அவரிடம் இருந்து மகாலிங்கம் ஐயர் 1946 ம் ஆண்டு கிரையம் பெற்றிருந்தார். மருதப்பனுக்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதனை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் அவர் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தினை தாக்கல் செய்துள்ளேன். மகாலிங்க ஐயர் கிரையம் பெற்ற பின்பு தாவா சொத்துக்களுக்கு அவர் பெயரில் பட்டா மாற்றியுள்ளாரா என்றால் இல்லை, ஆனால் வரி செலுத்தி வந்துள்ளார். அந்த வரி ரசிதுகள் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மருதப்பனுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்ற விவரத்தினை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மகாலிங்க ஐயர் தற்போது உயிருடன் இல்லை. அவருக்கு லட்சுமி, சியாமளா என்ற இரண்டுபெண் குழந்தைகள் உண்டு, அவருக்கு மனைவி இல்லை.

2. மகாலிங்க ஐயருக்கு லட்சுமி, சியாமளா மட்டும் தான் வாரிசுதாரர்கள் என்று காண்பிப்பதற்கு வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மகாலிங்க ஐயர் என்ன காரணத்திற்காக எவ்வளவு ரூபாய் கடன் வாங்கியிரந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது, ஆனால் அவர் கடனை திருப்பி செலுத்தியதற்கான டிஸ்சார்ஜ் சான்றிதழ் வா.சா.ஆ-3 ஐ பார்த்துதான் நாங்கள் கிரையம் வாங்கினோம். மகாலிங்க ஐயர் இறந்த பின்பு சியாமளா, லட்சுமி என்பவருக்கு மொத்த சொத்தினையும் அவர் பெயரல் பட்டா மாற்றுவதற்கு ஆட்சேபணை இல்லை என தாசில்தாரிடம் எழுதி கொடுத்ததால் லட்சுமிக்கு பாத்தியப்பட்டு, அவரிடம் இருந்து நாங்கள் கிரையம் பெற்றோம். லட்சுமிபெயரில் வட்டாட்சியர் பட்டா மாற்றினாரா என்றால் இல்லை. மேற்படி லட்சுமி வட்டாட்சியரிடம் பட்டா மாறுதல் கோரி மனு கொடுத்துள்ளாரா என்றால் கொடுத்துள்ளார், அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மகாலிங்க ஐயர் இறப்பதற்கு முன்பு தாவா சொத்து குறித்து லட்சுமிக்கு எந்த ஆவணமும் எழுதி கொடுக்கவில்லை. (குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)